# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 - 4354302

## இயேசுகிறிஸ்துவின் தெய்வீகம்

**முன்னுரை :**

கிறிஸ்தவத்தின் முழுமை இந்தக் கூற்றின்மேல் அமைந்துள்ளது. தேவ குமாரனாய் இருந்த, இருக்கிற இயேசுகிறிஸ்து தேவனுடைய எல்லா வல்லமையையும், தன்மையையும் கொண்டிருக்கிறார்.

### இந்தப் பாடத்தின் முக்கியத்துவம் :

கிறிஸ்தவமானது ஒரு முறையான நீதிநெறியோ அல்லது சட்டத் தொகுப்போ அல்ல, இது ஒரு வாழ்க்கை. இயேசுகிறிஸ்துவை கொண்டதான ஒரு வாழ்க்கை ஆகும். இயேசுகிறிஸ்துவின்மேல் நம்பிக்கை வைத்து அவரைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் வாழ்க்கையில் அனுபவித்ததும், வெளியாக்கப்பட்டதுமாய் இருக்கிறது. புத்தமதத்திலிருந்து 'புத்தர்' என்ற பெயரையும், இஸ்லாமிய மதத்திலிருந்து 'முகம்மது' என்ற பெயரையும் நீக்கும்போது இந்த இரண்டு மதத்திலும் உள்ள போதனைகள் பாதிக்கப்படுவதில்லை. இந்த மதங்களில் இருந்த நடைமுறை கொள்கைகளில் எந்தவிதமான குறையும் ஏற்படுவதில்லை. ஆனால் கிறிஸ்தவத்திலிருந்து 'இயேசுகிறிஸ்து' என்ற பெயரை நீக்கும் போது ஒன்றுமே இருப்பதில்லை, முற்றிலும் வெறுமையாகிவிடும்.

இயேசுகிறிஸ்து அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்பவராகவும், நல்ல போதகராகவும், மாத்திரம் இருந்திருப்பாரானால், கிறிஸ்தவத்தின் அடிப்படை முழுவதும் நொறுக்கப்பட்டு அதன் வீடானது உடைக்கப்பட்டு விழுந்து விடும். இயேசுகிறிஸ்து தெய்வமாக இல்லை என்றால் அவர் ஒரு ஒழுங்கற்ற ஸ்திரீக்குப் பிறந்த, சட்டத்திற்கு முரணான குழந்தை ஆவார். கிறிஸ்துமஸ் பாடல்கள் எல்லாம் புராணக்கதைகளின் தாலாட்டுகளாக இருக்கும். கிறிஸ்து தெய்வம் இல்லை யென்றால் அவர் செய்த அற்புதங்கள் எல்லாம் கட்டுக் கதைகளாகவும், அவர் பேசிய வார்த்தைகள் எல்லாம் பொய்யாகவும், பாவத்திலிருந்து மனிதனுக்கு மீட்பு என்ற பொதுவான பிரச்சனைக்கு தீர்வு காணக்கூடாமலும் இருக்கும்.

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் இல்லையென்றால், வெறுமையான அவருடைய கல்லறையிலிருந்து நம்பிக்கையின் கதிர்கள் புறப்பட்டு வராது. பாவம், மரணம், நரகம் இவைகளை வென்றிருக்க முடியாது. கிறிஸ்தவர்களின் மகிமையான எதிர்காலத்தின் நம்பிக்கை நொறுக்கப்பட்டிருக்கும். விசுவாசி இன்னும் தன்னுடைய பாவத்திலிருந்து எல்லா மனிதரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவனாயிருப்பான். மிக அவசியமாயிருக்கிற நம்பிக்கைக்கும் சமாதானத்திற்குமான செய்தி இழக்கப்பட்டு மறுபடியும் உலகமானது நம்பிக்கை யின்மையாலும், இருளாலும் பீடிக்கப்பட்டிருக்கும் (1 கொரி. 15:1–26).

கிறிஸ்தவர்களின் விசுவாசத்திற்கு இந்த சத்தியமானது அடிப்படையாக இருக்கிறது. எனவே இந்த சத்தியமானது முதலாவது பாடமாக தெரிந்து கொள்ளப்பட்டது. ஒவ்வொரு விசுவாசியும், வேதத்தில் கருத்தாய் இருக்கும் மாணவனும் இந்தப் பாடத்தில் உள்ள சத்தியத்தை இறுகப் பிடித்துக் கொள்ளவேண்டும்.

### இயேசுகிறிஸ்துவின் தெய்வீகம் உண்மை என்பதற்கான உறுதிச் சான்றுகள்

### I. இயேசுகிறிஸ்துவின் உரிமை கோரிக்கை மூலம் :

1. இயேசுகிறிஸ்துவே மேசியா என்று பழைய ஏற்பாட்டு வாக்கியங்கள் சாட்சி கூறின (யோவான் 5:39).
2. இயேசுகிறிஸ்து ஆபிரகாமுக்கு முன் இருக்கிறவர். இவரே ''இருக்கிறவராக இருக்கிறேன்'' என்று மோசேயுடனே சொன்னவர் (யாத்திராகமம் 3:13,14).

   'யெகோவா' என்பதற்கு ''இருக்கிறவராகவே இருக்கிறேன்'' என்ற அர்த்தமும், அவருடைய தன்னிருப்பையும் உறுதிப்படுத்துகிறது (யோவான் 8:57–59).
3. ''ஜீவ அப்பம் நானே'' என்று அவர் சொன்னார் (யோவான் 6:35,48).
4. ''நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்'' என்று சொன்னார் (யோவான் 8:12; 9:5).
5. அவர், நானே ஆடுகளுக்கு வாசல் என்றும், அந்த வாசல் வழியாக ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான் என்றும் சொன்னார் (யோவான் 10:7,9).
6. ''நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' என்றார் (யோவான் 14:6).

7. ''நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்'' என்று கூறினார் (யோவான் 11:25).
8. தாம் தேவனுக்கு சமமானவர் என்று உரிமை கோரினார் (யோவான் 10:30–33; 14:8,9).
9. உலகத்தோற்றத்திற்கு முன் தான் இருக்கிறவர் என்பதை உரிமை கோரினார் (யோவான் 17:5).

## II. இயேசுகிறிஸ்துவின் செயல்கள் மூலம் :

1. இயேசுகிறிஸ்து பாவத்தை மன்னித்தார் (மத்தேயு 9:2–6; மாற்கு 2:5–7; லூக்கா 7:47–50).

   தேவன் ஒருவர் மட்டும்தான் பாவங்களை மன்னிக்க முடியும் என்று அறிந்து வேதபாரகர்கள் இயேசுகிறிஸ்து தேவனை தூஷிக்கிறார் என குற்றம் சாட்டினார்கள். எனவே இயேசுகிறிஸ்து ஒன்று உண்மையான தேவனாக இருக்க வேண்டும் அல்லது தேவ தூஷணம் சொல்பவராக இருக்கவேண்டும்.
2. கடவுள் ஒருவரே செய்யக்கூடிய அற்புதங்களை இயேசுகிறிஸ்து செய்தார் :
   1. மரித்தோரை உயிரோடே எழுப்பினார் (லூக்கா 7:12–15; 8:52–55; யோவான் 11:41–44).
   2. குருடரைப் பார்க்கும்படி செய்தார் (யோவான் 9:4–7).
   3. தண்ணீரை திராட்சரசமாக மாற்றினார் (யோவான் 2:7–11).
   4. ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் கொண்டு 5,000 பேரை போஷித்தார் (புருஷர் மட்டும்). சிறுவர்களையும், ஸ்தீரீகளையும் சேர்த்து ஏறத்தாழ 20,000 பேர்கள் இருக்கலாம் என வேத பண்டிதர்கள் கூறுகிறார்கள் (மத்தேயு 14:15–21).
   5. எல்லாவிதமான நோய்களையும் அவர் குணமாக்கினார் (மாற்கு 2:10,11; லூக்கா 6:17–19).
   6. அவர் கட்டளையிட்டு சமுத்திரத்தை அடக்கினார் (மத்தேயு 8:23–27; லூக்கா 8:22–24).

## III. இயேசுகிறிஸ்துவின் தன்மைகள் மூலம் :

1. **விளக்கம் :**

   திரியேக தேவனின் வல்லமையும், மாறாத குணாதிசயமும் தேவனின் தன்மைகள் ஆகும்.
2. **இரண்டு வகையான தன்மைகள் :**

   **அ. இயற்கை தன்மை :**

   இத்தன்மைகள் தேவனையே வெளிப்படுத்தி, தேவன் ஒருவருக்கே சொந்தமானவைகளாய் இருக்கின்றன. இவைகள் முழுமையானவைகள், மாற்றத்தக்கவைகள் அல்ல.

   **ஆ. நீதிக்குரிய தன்மை :**

   தேவன் தம்மையே தம்முடைய படைப்புகளுக்கு வெளிப்படுத்திய தன்மைகள் கொண்டதாகும்.
3. **ஒன்பது இயற்கை சம்பந்தமான தன்மைகளும், ஒன்பது நீதிக்குரிய தன்மைகளும் உள்ளன.**

   **அ. இயற்கை சம்பந்தமான தன்மைகள் :**
   1. தேவனின் வாழ்க்கை :
      1. ஜீவன் (வாழ்க்கை)
      2. ஆவிக்குரிய தன்மை
      3. ஆள் தன்மை
   2. தேவனின் ஆள் தன்மை :
      1. ஒற்றுமை
      2. நித்தியம்
      3. மாறாத்தன்மை
   3. தேவனின் வல்லமை :
      1. சர்வ ஞானி (எல்லாம் அறிந்தவர்)
      2. சர்வ வல்லமையுள்ளவர்
      3. சர்வ வியாபகர்

**ஆ.நீதி சம்பந்தமான தன்மைகள் :**

1. தேவனின் இயற்கை தன்மை : (சுபாவம்)
   1. அன்பு
   2. கிருபை
   3. இரக்கம்
2. தேவனின் குணம்
   1. பரிசுத்தம்
   2. நீதி
   3. உண்மை
3. தேவனின் ராஜரீகம் : (அரசாங்கம்)
   1. ஞானம்
   2. சத்தியம்
   3. சர்வ அதிகாரம்

**குறிப்பு :**

''திரியேக தேவன்'' என்ற பாடத்தைப் படிக்கும்போது இத்தன்மைகளை விவரமாகவும், மிகத்தெளிவாகவும் பார்க்கலாம். தேவனுக்குரிய 18 தன்மைகளையும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பெற்று அதன் மூலம் அவருடைய தெய்வீகம் காண்பிக்கப்படுகிறதைக் குறித்து இந்தப் பாடத்தில் நாம் பார்க்கும்பொழுது மிகுந்த சந்தோஷம் அடைகிறோம்.

**4. சில உதாரணங்கள் :**

**அ. இயேசுகிறிஸ்து நித்தியமானவர் :**

(யோவான் 1:1–3; கொலோசெயர் 1:17; எபிரெயர் 1:10–12; வெளி 1:8,18).

**ஆ. இயேசுகிறிஸ்து மாறாதவர் :**

(ஆச்சரியவிதமான மாறாத தன்மை – எபிரெயர் 1:11,12; 13:8)

**இ. இயேசுகிறிஸ்து சர்வ ஞானி :**

(எல்லாம் அறிந்தவர். வரையரையில்லாத சர்வலோக ஞானத்தையும். அறிவையும் கொண்டிருக்கிறார்)

1. மத்தேயு 9:4 – இயேசுகிறிஸ்து அவர்கள் நினைவுகளை அறிந்தவர்.
2. யோவான் 6:64 – விசுவாசியாதவர்கள் இன்னாரென்றும், தம்மைக் காட்டிக் கொடுப்பவன் இன்னாரென்றும் அவர் அறிந்திருந்தார்.
3. யோவான் 5:22 – எல்லா நியாயத்தீர்ப்பும் அவரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது.
4. வெளி. 20:11 – பாவிகளை நியாயந்தீர்க்கும் நீதிபதி இவரே.
5. 1 கொரிந்தியர் 4:5 – ஒவ்வொருவருடைய இருதயத்திலுள்ளதையும் அறிந்திருக்கிறார்.
6. கொலோசெயர் 2:3 – அவருக்குள் ஞானம், அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்கள் எல்லாம் அடங்கியிருக்கிறது.

**ஈ. இயேசுகிறிஸ்து சர்வ வல்லமையுள்ளவர் :**

(வரையரையில்லாத சர்வ வல்லமையைக் கொண்டிருக்கிறார்)

1. கொலோசெயர் 1:16,17 – அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது, எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.
2. மத்தேயு 28:18 – சகல அதிகாரமும் அவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.
3. எபிரெயர் 1:3 – சர்வத்தையும் தம்முடைய வல்லமையினால் தாங்குகிறார்.
4. மத்தேயு 14:19–21 – இங்கே அவருடைய உருவாக்குதலின் வல்லமையை கவனிக்க வேண்டும்.
5. மத்தேயு 14:26; – இயேசுகிறிஸ்துவானவர் இயற்கையின்மேல் அதிகாரம் செலுத்துவதை லூக்கா 8:24 இங்கே கவனியுங்கள்.

**உ. இயேசுகிறிஸ்து சர்வ வியாபகர் :**

(ஒரே வேளையில் எல்லா இடங்களிலும் இருக்கக்கூடிய தன்மை கொண்டவராக இருக்கிறார்)

1. மத்தேயு 18:20 .. இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இரண்டுபேர் எங்கு கூடியிருந்தாலும் அவர்களின் மத்தியில் இருக்கிறார்.
2. மத்தேயு 28:19,20 .. சகல நாட்களிலும் அவர் நம்முடனேகூட இருக்கிறார்.
3. யோவான் 3:13 .. இயேசுகிறிஸ்து பூமியில் இருந்தபொழுதிலும்கூட பரலோகத்திலும் இருந்தார்.

**ஊ. இயேசுகிறிஸ்து சர்வ அதிகாரமுள்ளவர் :**

(கிறிஸ்துவானவர் தம்முடைய சொந்த சித்தத்தின்படியேயும், நோக்கத்தின்படியேயும் எந்தக் காரியத்தையும் செய்ய முழு அதிகாரத்தையும் கொண்டிருக்கிறார்.

1. யோவான் 5:21,22, இயேசுகிறிஸ்து தமக்குச் சித்தமானவர்களுக்கு ஜீவன் கொடுக்கிறார்.
2. மத்தேயு 28:18, சகல அதிகாரமும் இயேசுகிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.
3. பிலிப்பியர் 2:10,11, இயேசுகிறிஸ்துவுக்கு முன்பதாக முழங்கால் யாவும் முடங்கும்.

## VI. இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலம் :

ரோமர் 1:4,5–ம் வசனத்தை மனனம் செய்யவும். இந்தப் பொருள் மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். ஏனவே இதை வரும் பாடங்களில் தனிப்பட்ட பாடமாகப் படிக்கலாம். கிறிஸ்தவ விசுவாசத்திற்கு ‘‘கிறிஸ்துவின் தெய்வீகம்’’ அடிப்படையாக இருக்கிறதுபோல சுவிசேஷத்திற்கு இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலைக்கல்லாய் இருக்கிறது.

## V. இயேசுகிறிஸ்துவின் தம்மை தொழுது கொள்வதை ஏற்றுக்கொண்டதன் மூலம் :

உண்மையான தொழுகை தேவன் ஒருவருக்கே உரியது. அந்தத் தொழுகையை அவர் ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், அதைச் செய்ய கட்டளையும் இட்டதினால் அவர் தேவனாயிருக்கிறார் என்பதை நிரூபிக்கப்படுகிறது.

1. மத்தேயு 14:33, அவர்கள் இயேசுகிறிஸ்துவைப் பணிந்து கொண்டார்கள்.
2. மத்தேயு 28:9, அவர்கள் கிட்டவந்து அவர் பாதங்களைத் தழுவி அவரைப் பணிந்து கொண்டார்கள்.
3. பிலிப்பியர் 2:10,11, உலகத்தில் உள்ள அனைத்து மக்களும் ஒருநாளில் இயேசுகிறிஸ்துவைப் பணிந்து கொள்வார்கள்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# இயேசுகிறிஸ்துவின் தெய்வீகம்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**(பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்)**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. கிறிஸ்தவத்தின் முழுமை எதில் அமைந்துள்ளது ?
   a. இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்
   b. இயேசுகிறிஸ்து தேவனாய் இருந்தார், இன்றைக்கும் தேவனாய் இருக்கிறார்
   c. இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம்
2. கிறிஸ்தவம் என்பது என்ன ?
   a. ஒரு சட்ட தொகுப்பு
   b. ஒரு நடத்தை
   c. இயேசு கிறிஸ்துவைக் கொண்ட வாழ்க்கை
3. கிறிஸ்தவத்திலிருந்து ‘கிறிஸ்துவை நீக்கும் பொழுது’
   a. கிறிஸ்தவம் இருக்காது
   b. கிறிஸ்தவம் ஒரு பெரிய மதமாக இருக்கும்
   c. அப்போஸ்தலர்கள் கிறிஸ்தவத்தை ஆரம்பித்திருப்பார்கள்
4. யோவான் 8:58–ன் படி, இயேசுகிறிஸ்துவின் தெய்வீகம் என்பது என்ன ?
   a. இந்தப் பூமியில் அவர் பிறந்த பொழுது ஆரம்பமானது
   b. இந்த உலகம் உண்டான பொழுது ஆரம்பமானது
   c. அவர் ஆரம்பம் இல்லாதவர்
5. யோவான் 17:5–ல், இயேசு கிறிஸ்துவைக்குறித்து நாம் கற்றுக்கொள்வது என்ன ?
   a. தேவன் b. இரட்சகர் c. உலகத்தோற்றத்திற்கு முன்னே இருக்கிறவர்
6. இயேசுகிறிஸ்து பாவத்தை மன்னிக்கிறவர் என்பது எதை வெளிப்படுத்துகிறது ?
   a. அவர் நல்லவர் என்பதை
   b. அவர் அன்புள்ளவர் என்பதை
   d. அவர் தேவன் என்பதை
7. இயேசுகிறிஸ்து குருடரின் கண்களைத் திறந்தது எதை வெளிப்படுத்துகிறது ?
   a. அவர் சிறந்த மருத்துவர் என்பதை
   b. அவர் தேவன் என்பதை
   c. அவர் விரும்பினார் என்பதை
8. தேவனின் தன்மைகளினால் நாம் அறிந்து கொள்வது என்ன ?
   a. தேவன் ஜீவனுள்ளவர்
   b. தேவனின் தெய்வீகத்தை
   c. தேவனை ஆவிக்குரிய கண்களால் நாம் பார்க்க முடியும்

**9.** கீழே கொடுக்கப்பட்டவைகளில் தேவனின் இரு வகையான தன்மைகளை வெளிப்படுத்தும் **இரண்டை** வட்டமிடவும்.

a. இயேசுகிறிஸ்துவே தேவன்

b. தேவன் தம்மை வெளிப்படுத்தின விதம்

c. தேவனின் பரிபூரணம்

d. தேவனின் நீதி

e. தேவன் தம்மை படைப்புகளுக்கு வெளிப்படுத்தும் விதம்

**10.** கீழே கொடுக்கப்பட்ட தேவனின் தன்மைகளில் ஒவ்வொன்றிற்கும் **ஐந்து** காரிங்களை வரிசைப்படுத்தவும் :–

| **அ. இயற்கை சம்பந்தமான தன்மைகள் :** | **ஆ. நீதி சம்பந்தமான தன்மைகள் :** |
| --- | --- |
| a. -------------------------------- | a. ----------------------------------- |
| b. -------------------------------- | b. ----------------------------------- |
| c. -------------------------------- | c. ----------------------------------- |
| d. -------------------------------- | d. ----------------------------------- |
| e. -------------------------------- | e. ----------------------------------- |

**11.** யோவான் **1:1–3** வசனங்கள் கிறிஸ்துவைக்குறித்து நமக்கு போதிப்பது என்ன **?**

a. மாறாதவர்

b. சர்வ வல்லவர்

c. நித்தியமானவர்

**12.** சுவிசேஷத்திற்கு மூலைக்கல்லாக இருப்பது எது **?**

a. இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

b. வேதாகமம் தேவனின் உண்மையான வார்த்தை

c. கிறிஸ்து சிலுவையில் மரித்தார்

**13.** பிலிப்பியர் **2:10,11** –ன்படி இயேசுகிறிஸ்துவை எப்படி பணிந்து கொள்வார்கள் **?**

a. கிறிஸ்துவை அனைவரும் நேசித்து

b. இயேசு கிறிஸ்து கர்த்தரென்று அறிக்கை செய்து

c. முடிவில் அனைவரும் பரலோகம் செல்வார்கள்

---

**அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்**

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________________________________

**முகவரி :** ____________________________________________

____________________________________________